சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.84/2018</u>

23.09.2025

பி.வா.சா.1 திரு. கைலாசம், த/பெ. துரைராஜ்

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் 10 ஆம் வகுப்பு படித்துள்ளேன். நான் வைத்துள்ள ஏஜென்சி நம்பர் 2, மாரியம்மன் கோவில் தெரு, பேரளத்தில் உள்ளது. நான் 12 வருடங்களாக ஏஜென்சியை வைத்துள்ளேன். தற்போதும் மேற்சொன்ன முகவரியில் தான் தொழில் செய்துவருகிறேனா என்றால் ஆமாம். நீதிமன்ற ஆணையர் மேற்சொன்ன முகவரியில் தான் பார்வையிட்டார். 27.01.2018 ல் நான் வாதிக்கு கடிதம் எழுதியுள்ளேன் என்றாலும் அதில் ரூ.1,36,177/- கொடுக்க வேண்டும் என ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த கடிதத்தில் வாதி எனக்கு கொடுக்க வேண்டியதாக சொல்லியுள்ள தொகையை வசூல் செய்ய சட்ட நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. பின்னிட்டு வாதி 10.02.2018 ல் எனக்கு அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் சேதாரமடைந்த மற்றும் காலாவதியான பொருட்களையும் ஒப்படைத்தால் கம்பெனிக்கு அனுப்பி பணம் தருவதாக சொல்லியிருந்தார் என்றால் சரிதான், ஆனால் வாதி தான் எங்கள் கடைக்கு வந்து எடுத்துச்செல்லவேண்டும். வாதி கொடுத்த அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரிதான். வாதி கொடுக்கும் பொருட்களில் சேதாரமடையும் மற்றும் காலாவதியாகும் பொருட்களை நான் திரும்ப கொடுப்பதும் வாதி வாங்குவதும் வழக்கம் என்றால் சரிதான். பொருட்களை வாங்கும் போதும் திருப்பி கொடுக்கும் போதும் சில நடைமுறைகளை பின்பற்றுவோம் என்றால் இல்லை. வாதியுடைய பொருட்களை எனக்கு கடனாக வழங்குவார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சரக்கு வருவதற்கு முன்பு இன்வாய்ஸ் பில் வரும் என்றாலும் அதை நான் சரிபார்த்து வாங்குவேன் என்றாலும் சரிதான். 19.12.2014 ல் வாதி எனக்கு இன்வாய்ஸ் பில் ஒன்று கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ரசீதில் உள்ள கையெழுத்து என்னுடையது என்றால் என்னுடையதல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்திலுள்ள கையெழுத்து என்னுடையதில்லை என்று எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. 19.11.2017 க்கு

பின்னிட்டு எனக்கும் வாதிக்கும் வரவு செலவு இல்லை என்றால் சரிதான். ஆணையர் நியமனம் செய்ய நான் தான் மனு செய்தேன். காலாவதியான மற்றும் சேதாரமான பொருட்களை பார்வையிட நீதிமன்ற ஆணையருக்கு மனு செய்தேன். என்னிடம் காலாவதியான மற்றும் சேதாரமான பொருட்கள் இருப்பதை மறுப்பு தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். நான் மேற்சொன்ன முகவரியில் தாவா பொருட்களை தவிர வேறு பொருட்களும் வைத்துள்ளேன் என்றால் தனியாகதான் வைத்துள்ளேன். ஆணையர் சொத்தை பார்வையிடும் போது வாதியிடம் வாங்கிய பொருட்களை காட்ட ஆவணம் கொடுத்தேனா என்றால் இல்லை. காலாவதியான மற்றும் சேதாரமான பொருட்கள் தன்னிடம் கொடுக்கவேண்டும் என வாதி பலமுறை என்னிடம் கேட்டார் என்றால் இல்லை. வாதியிடம் பொருட்களை திரும்ப கொடுக்கும் போது அதற்கண்டான ஆவணங்களை திரும்ப கொடுப்போம் என்றால் நான் கொடுக்க மாட்டேன் வாதி தான் கொடுப்பார். வாதியிடம் பொருட்களை திரும்பகொடுக்கும் போது நான் ரசீது வழங்கினேன் என்றால் வாதியும் திரும்ப எடுத்துக்கொள்வார் என்றால் சரியல்ல. நான் திருப்பி கொடுக்கும் பொருட்களை வாதி வாங்கமாட்டார் என்றாலும் சம்பந்தப்பட்ட நிறுவனத்திலிருந்து ஊழியர் தான் எடுத்து செல்வார் என்றாலும் சரியல்ல. காலாவதியான மற்றும் சேதாரமான பொருட்களை ரூ.1000/- வாடகை கொடுத்து வைத்துள்ளேன் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த பொருட்களை எந்த இடத்தில் வைத்துள்ளேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் தனியாக கடை எடுத்து பொருட்களை வைத்திருக்கவில்லை என்றாலும் நான் ஏற்கனவே கடை நடத்திவரும் இடத்திலேயே பொருட்களை வைத்திருந்ததால் தான் ஆணையர் அங்கு வந்து பார்வையிட்டார் என்றால் சரியல்ல. நான்தனியாக கட்டிடத்தில் பொருட்களை வைத்திருந்தால் அதற்கு ஜிஎஸ்டி செலுத்தியிருப்பேன் என்றாலும் அதற்கான ஆவணம் இல்லை என்றாலும் சரிதான். நான் எதிர்பாத்திய வழக்குரையில் கூறியுள்ள வழக்குக்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பொருட்களை திரும்ப ஒப்படைக்க வாதி கேட்டும் நான் ஒப்படைக்காததால் வாதி பொறுப்பல்ல என்றால் சரியல்ல. என்னிடம் என்ன என்ன பொருட்கள் உள்ளது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் வாதி எந்த தொகையும் கொடுக்கவேண்டியதில்லை என்றாலும் வாதிக்கு மனஉளைச்சல் ஏற்படுத்தியதால்

நான் தொகை கொடுக்கவும் நஷ்ட ஈடு கொடுக்கவும் கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. தொகை கொடுக்க வேண்டியிருந்தால் உரிய நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றாலும் எனவே எதிர்பாத்திய வழக்குரையில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.